# தேசிய பல்கலையில் புதிய நிலையம்; புதிய படிப்பு

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம், புதிய ஒரு நிலையத்தை நேற்று திறந்தது. மாணவர்களைச் சிந்தனையாளர்களாக மாற்றும் வகையில் பல துறைகளை உள்ளடக்கிய புதிய படிப்பு ஒன்றை போதிக்க அந்தப் புதிய நிலையம் திட்டமிடுகிறது.

அத்தகைய மாணவர்கள், சிக்கலான நகர சூழலுக்குள் புத்தாக்கத் தீர்வுகளை உருவாக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. புதிய படிப்புக்கு 'என்யுஎஸ் நகரங்கள்' (NUS Cities) என்று பெயர். அது கட்டடக்கலை, பொறியியல், பொதுக் கொள்கை ஆகிய துறைகளை உள்ளடக்கிய பாடங்களை போதிக்கும்.

இத்தகைய துறைகளைச் சேர்ந்த அம்சங்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒன்றுடன் ஒன்று செயல்பட்டு பொது இடங்களை மிகப் பிரபலமான இடங்களாக ஆக்கியிருப்பது எப்படி என்பதை அந்தப் படிப்பு மாணவர்களுக்கு போதிக்கும். புதிய நிலையம், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வடிவமைப்பு பொறியியல் கல்லூரிக்குள் அமைந்திருக்கும்.

நகரங்களுக்குத் திட்டமிடுவது, நிர்வகிப்பது போன்ற பாடங்களை போதிக்கும் வகுப்புகளை அது நடத்தும்.

பல துறைகளையும் உள்ளடக்கும் பல்வேறு பாடங்களை மாணவர்களுக்குச் சேர்த்து போதிக்க வேண்டும் என்று இந்தப் பல்கலைக்கழகம் பரந்த அளவில் முயற்சிகளை எடுத்து வருகிறது.

அந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக புதிய நிலையம் இடம் பெறுகிறது.

அதில் படிக்கும் மாணவர்கள் முதுநிலை பட்டம் பெறலாம். அதோடு மட்டுமின்றி முனைவர் பட்டம் பெறுவதற்கான படிப்பைத் தொடரவும் வாய்ப்பு இருக்கும் என்று தெரிகிறது.

தேசிய பல்கலைக்கழகத்தின் வடிவமைப்பு பொறியியல் கல்லூரி 2021ல் ஏற்படுத்தப்பட்டது. அது பொறியியல் துறையையும் வடிவமைப்புச் சுற்றுச்சூழல் பள்ளியையும் இணைத்து உருவாக்கப்பட்டது.

அறிமுகப்படுத்தவிருக்கும் புதிய பட்டப் படிப்பையும் சேர்த்து மொத்தம் 15 பட்டப் படிப்புகளை அந்தக் கல்லூரி போதிக்கிறது.

புதிய படிப்பு தொடர்பான விவரங்கள் பின்னொரு தேதியில் அறிவிக்கப்படும்.

துணைப் பிரதமர் ஹெங் சுவீ கியட் புதிய நிலையத்தின் தொடக்க நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். புதுப்பிக்கப்பட்ட கட்டடங்களும் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

இப்போதைய கட்டடங்களின் செயல்திறனை மேம்படுத்துவது முக்கியமான ஒன்று என்று துணைப் பிரதமர் தெரிவித்தார்.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.